# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு

## மாணவ இலக்கிய மின்னிதழ்

குடில் 4 மார்ச் 2022 விருந்து 12



**தமிழ்த்துறை**

**சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு**

**சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி**

**சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.**

நற்றமிழ்க்குடில்
மாணவ இலக்கிய மின்னிதழ்
சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு

## மாணவ இலக்கிய மின்னிதழ்

குடில் : 4 மார்ச் 2022 விருந்து : 12

## தமிழ்த்துறை

### சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.

# நற்றமிழ்க்குடில்


ஆசிரியர் குழு : அ. ஸ்டெல்லாமேரி
முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு

பெ. சாந்தி
முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு

மு. ரம்யா
இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு

ரா. பிரியதர்ஷினி
இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு

சா. பவித்ரா
இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு



ஆலோசனைக் குழு : டாக்டர் சேது குமணன்
கல்லூரித் தலைவர்

முனைவர் மீரா முருகேசன்
கல்லூரி முதல்வர்

முனைவர் கண்மணி சுப்பிரமணியன்
கல்லூரித் துணை முதல்வர்

முனைவர் தே. இராணி எலிசபெத்
தமிழ்த் துறைத்தலைவர்

தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்



வெளியீடு : தமிழ்த்துறை
சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு
சோகா இகெதா கலை மற்றும்
அறிவியல் மகளிர் கல்லூரி
சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம்,
சென்னை *600 099.*

*Blog : sokatamil blogspot.com*
*Facebook : Soka Tamil Avai*
*Youtube : Sokatamilavai*
*E.mail : sokatamilavai2021@gmail.com*

# நற்றமிழ்க்குடில்

## மாணவ இலக்கிய மின்னிதழ்

குடில் : 4

விருந்து : 12

தமிழ்த்துறை
சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

மார்ச் 2022

# உள்ளே....

தலையங்கம்
மலரே.....
கட்டுரைகள்
நூல் அறிவோம்
பழமொழி நுண்பொருள்
அறிவியல் செய்திகள்
உணவே மருந்து
விடுகதைகள்
பண்டிகைகள் வரலாறு
இசைக்கருவி
பொன்மொழிகள்
கடித இலக்கியம்
சிறுகதை
சொல் விளையாட்டு
கவிதைகள்
தகவல் களஞ்சியம்
தூரிகைத் தூரல்கள்
துறை நிகழ்வுகள்

# தலையங்கம்

## சங்ககாலப் போர் முறைகள்

சங்ககாலப் போர்கள் அறவழியைச் சார்ந்தே அமைந்தது. சங்க காலத்தில் தமிழர்கள் வாழ்வியலை அகம், புறம் என இரண்டாகப் பிரித்தனர். தலைவன், தலைவி வாழ்க்கை முறையை "அகம்" என்றும் வீரம், கொடை, போர் முறை போன்றவற்றை "புறம்" என்றும் கூறினர். சூரிய உதயத்தின் போது முரசறைந்து போரைத் தொடங்கி, சூரியன் மறையும் போது முரசரைந்து முடிப்பர். எத்தனை நாட்கள் போர் நடைபெற்றாலும் போருக்கு உரிய இலக்கணங்களைச் சரியாகப் பின்பற்றிப் போரிட்டனர்.

**போர்க் காரணங்கள்**

ஒரு நாட்டைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணமே போருக்கு முதன்மைக் காரணமாக அமைகிறது. சிற்றரசர்கள் கப்பம் கட்டத் தவறும் போது போரைச் சந்திக்க நேரிடும்.

ஒரு நாட்டின் மீது படையெடுக்க வரும் அரசன் முதலில் தன்நாட்டு வீரன் ஒருவனைப் பகை நாட்டிற்கு அனுப்பி கால்நடைகளைக் கவர்வான். இது வெட்சித்திணை எனப்படும். கால்நடை கவர்தலை எதிர்த்து நிற்பது கரந்தைத் திணை எனப்படும்.

மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டுடன் போரிடுவது வஞ்சித்திணை என்றும், தன் நாட்டைக் கைப்பற்றவரும் பிறநாட்டு அரசனை எதிர்த்து போரிடுவது காஞ்சித்திணை என்றும் கூறுவர். தன்னுடைய மதிலை வேண்டி உள்ளிருந்தே, வெளியே இருக்கும் பகை அரசனோடு போரிடுவது நொச்சித் திணை ஆகும். பிறநாட்டு மதிலைக் கைப்பற்ற போரிடுவது உழிஞைத் திணை.

இருநாட்டு அரசர்கள் போரிடுவது தும்பைத் திணை என்றும் இதில் வெற்றி பெற்ற அரசன் வாகைப்பூச் சூடி மகிழ்வதை வாகைத்திணை என்றும் அழைத்தனர். பாடப்படும் ஆண்மகனின் ஒழுகலாற்றைப் பாடாண்திணை என்றும் வெட்சி முதல் பாடாண் வரை உள்ள புறத்திணைகளில் பொதுவானவற்றைக் கூறுவதால் பொதுவியல் திணை என்று புறம் பற்றிய செய்திகளை "புறப்பொருள் வெண்பாமாலை" நூலின் மூலம் அறியமுடிகிறது.

**அரசனின் சிறப்பு**

**"படைகுடி கூழ் அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு"**

படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆகிய ஆறும் சிறப்பாகக் கொண்ட அரசன் மற்ற அரசர்களுள் சிங்கம் போன்று உயர்ந்த இடத்தில் கருதப்படுவான்.

இதில் வள்ளுவர் முதலில் கூறுவது படை. போர்களத்தில் யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை, தேர்படை, போன்ற படைகள் வேல், வாள், வில் முதலிய போர் கருவிகளும் உடையவனாக அரசன் இருத்தல் வேண்டும்.

**போர் நெறி**

**ஆவும் ஆனியற் பார்ப்பன
மாக்களும்**

**பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்**
**தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்**
**எம்அம்பு கடிவிடுதும், நும்அரண் சேர்மீன் (புறநானூறு – 9)**

பசுக்கள், பார்ப்பன மக்கள், பெண்டிர், பிணியுடையவர், புதல்வர் பெறாதவர்கள் என இவர்கள் அனைவரும் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்காகப் போருக்கு முன்னரே அறிவிப்பு விடுவதாக இப்பாடல் அமைகிறது.

இப்பாடல் மூலம் மன்னன் முதுகுடுமி பெருவழுதியின் போர் நெறிமுறையை அறியமுடிகிறது.

சங்ககாலத்தில் போர் நெறிமுறைகளை வகுத்து அதைச் சரியாகப் பின்பற்றியதன் மூலம் போரினால் நாட்டு மக்கள் துன்பமடையக்கூடாது என்று மன்னன் கருதியதைக் காணமுடிகிறது.

சங்ககாலப் போர் முறையோடு தற்பொழுது நடைபெறும் போரில் இத்தகைய முறைகள் பயன்படுத்தப்படுகின்றனவா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

எல்லாக் காலக்கட்டத்திலும் சட்டங்களும் ஒழுங்கு முறைகளும் மன்னர்களுக்கும் மக்களுக்கும் வகுக்கப்பட்டே இருக்கின்றன. அவை கடைபிடிக்கப் படுகின்றனவா என்பதே இன்றைய சூழலில் கவனிக்கப்பட வேண்டியது.

நாட்டைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணம் அரசனுக்கு இருந்தாலும் மக்கள் நலனில் அக்கறை கொண்டு போர் நிகழ்த்தினர். தற்போது தலைவன் பொதுவானவனாக இல்லாமல் தன் நலனைத் தனது வெற்றியை என முன்னெடுப்பதே நாட்டின் சீர்கேடுக்கும் மக்கள் நலன் கெடுவதற்கும் காரணமாக அமைகிறது.

**மக்களின் வீரம்**

**வேல்கைக் கொடுத்து, வெளிதுவிரித்து உடீஇப்,**
**பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி,**
**ஒருமகன் அல்லது இல்லோள்,**
**செருமுக நோக்கிச் செல்க என விடுமே! (புறநானூறு 279)**

முதல் நாள் போரில் தன் தந்தையை இழந்தாள். இரண்டாம் நாள் போரில் தன் கணவனை இழந்தாள். இன்று தெருவில் போர் ஒலி கேட்டதும் முகம் மலர்ந்து எவ்விதக் கலக்கமும் இன்றி சிறுவனான தன் ஒரே மகனிற்கு வெண்ணிற ஆடை உடுத்தி, தலையில் எண்ணெய் தடவி, கையில் வேல் கொடுத்து போர்களம் நோக்கி செல்லுமாறு அனுப்பி வைத்தாள்.

தமிழரின் உணர்வில் கலந்த இந்த வீரம் இன்றும் எதிர்நாட்டு இராணுவத் தாக்குதலில் தன் சொந்தத்தை இழக்கும் ஒவ்வொரு வீரபெண்மணிக்குள்ளும் இருப்பதைக் காணமுடிகிறது.

**“இலக்கியம் வாழ்வியலை அழகாய் வாழ்ந்துக் காட்டியுள்ளது”**

அ. ஸ்டெல்லாமேரி, முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு

## மலரே.....

# சண்பக மலர்



சண்பக மலர் திருச்சிவபுரம், திருநாகேசுவரம், திருபெண்ணாகடம் முதலிய கோயில்களில் தல விருட்சமாக உள்ளது. வீடுகளில் ஆலயங்களில் வழிபாடு செய்ய பயன்படுத்தப்படுகிறது. மேற்கு தொடர்ச்சி மலைக் காடுகளில் வளரும், இதன் மையப்பகுதி மேல் நோக்கிக் குவிந்த இலைகளை உடையது. மஞ்சள் அல்லது வெண்மை நிறத்தில் மலர்கள் இருக்கும். சண்பக மரம் நெடிது உயர்ந்து வளரும் என்றுமே பசுமையாக இருக்கும் மரமாகும்.

சண்பக மரத்தின் இலை, பூ, விதை, வேர், பட்டை ஆகியவை மருத்துவப் பயனுடையதாகும். சண்பக மரம் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும், காற்றைத் தூய்மைப்படுத்துவதாகவும் நோய் தொற்றுகளை நீக்கும் அருமருந்தாகவும் உள்ளது. பூசைக்காகவும், தோட்டங்களில் அழகுக்காகவும் நறுமணத்திற்காகவும் வளர்க்கப்படுகிறது.

குறிஞ்சிப்பாட்டில் கூறப்படும் 99 வகைகளுள் இம்மலரும் ஒன்று.

செருந்தி அதிரல் பெரும் தண்
சண்பகம் கரந்தை குளவி கடி கமழ்
கலி மா                                        குறிஞ்சிப்பாட்டு - 75,76



அரும் பெறல் ஆதிரையான்
அணிபெற மலர்ந்த
பெரும் தண் சண்பகம் போல
ஒருங்கு அவர்
பொய்யார் ஆகுதல் தெளிந்தனம்        கலித்தொகை - 150

எனும் பாடல்கள் மூலம் சண்பக மலர் சிவபெருமான் அணிந்துக் கொள்ளும் மலர் என்பதும், பருவம் பொய்க்காமல் மலரும் என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

பரிபாடல், தேவாரம், நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் உள்ளிட்ட பல நூல்களில் செண்பக மலர் பற்றிய குறிப்புகள் இடம் பெறுகின்றன.

**இரா. செல்வராணி, முதுகலைத்தமிழ், முதலாமாண்டு**

# கட்டுரைகள்

## அழிந்து வரும் நாட்டுப்புறக்கலைகள் - தெருக்கூத்து

**முன்னுரை**

இன்றைய தலைமுறையில், நாட்டுப்புறக் கலைகளைப் பற்றிப் பலருக்கும் தெரியவில்லை. கேள்விப்பட்டதும் இல்லை. பலர் பார்த்ததும் இல்லை. எனவே நமது தமிழகத்தின் சொத்தான அவற்றைப் பற்றி அறிந்து கொள்வோம்.

தமிழகத்தில் இசை, நாடகம், நடனம், கூத்து எனப் பல்வேறு கலைகள் இருக்கின்றன. சங்க இலக்கியம் முதல் இன்று உள்ள இலக்கியங்கள் வரை கலைகளைப் பேசுகின்றன.

**தெருக் கூத்தின் வரலாறு**

தெருக் கூத்து தமிழர்களின் பழங்கலையில் ஒன்றாகும். தெருக்கூத்தில் நாடகம், ஆடல், பாடல் என்று பலதரப்பட்ட அம்சங்கள் கலந்திருக்கும். இக்கலை புனிதமான கலை என்பதை உணர்த்தும்.

பொதுவாகத் தெருக்கூத்து தொன்மம், நாட்டார்க்கதை, சீர்திருத்தக் கதை அல்லது விழிப்புணர்வுக் கதைகளில் ஒன்றை மையமாக வைத்து நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

தெருக்கூத்து நடைபெறும் இடம் "களரி" எனப்படும். தெருக்கூத்து கோவில் திடல்களிலும் அறுவடையான வயல்களின் நடுவிலும் நடைபெறும். கூத்திற்கு மிகவும் இன்றியமையாத ஒன்று பின்பாட்டு ஆகும். ஆடலும், பாடலும் இணைந்த நாட்டிய நாடகமே தெருக்கூத்து என்பர். கட்டியங்காரன் என்பவர் தெருக்கூத்தின் முக்கிய நபராவார்.

தெருக்கூத்திற்குப் பல விதிமுறைகளும் உண்டு. தெருக்கூத்து என்பது ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கதைகளை மையமாகக் கொண்டு நாடக வடிவில் நடத்தப்படுவது ஆகும். சிலப்பதிகாரம் தெருக்கூத்தின் முன்னைய வடிவம் என டாக்டர் மு. சண்முகப்பிள்ளை கூறுகிறார்.

தெருக்கூத்து தமிழகத்தில் அனைத்துக் கிராமங்களிலும் நடத்தப்பெற்று வந்தன. கோவில் விழாக்களில் இன்றியமையாத ஒன்றாகத் தெருக்கூத்து காணப்பட்டது.

தெருக்கூத்து ஆடுவதற்குப் பெண்களை அனுமதிக்கமாட்டார்கள். கூத்து ஆடுவதற்குப் பல அணிகலன்களை அணிந்துக் கொண்டு. முகத்தில் அரிதாரம் போன்றவைப் பூசிக்கொண்டு ஆடுவார்கள்.

தெருக்கூத்தர்கள் விரதமிருந்து ஆடுவதும் கடவுள் கோலத்தில் வருகின்ற கூத்தர்களைக் கடவுளாக எண்ணி பார்வையாளர்கள் வணங்குவதும் உண்டு. கதையாகக் கூத்து உருவாகி, இரவு 10 மணிக்கு மேல் தொடங்கி மறுநாள் காலை வரை இக்கூத்து நிகழ்த்தப்படும்.

**இன்றைய நிலையில் அழிந்து வரும் தெருக்கூத்து**

தமிழகத்தில் அழிந்து வரும் கலைகளில் தெருக்கூத்து ஒன்றாக உள்ளது. அந்தக் காலத்தில் தமிழ்நாடு முழுவதும் நடந்து வந்த நிகழ்ச்சி, இப்பொழுது தமிழ்நாட்டின் வட மாவட்டங்களான சேலம், தர்மபுரி, புதுச்சேரி போன்ற வேறு சில இடங்களில் மட்டுமே நிகழ்ந்து வருகின்றன.

தற்போது மிகக் குறைந்த அளவே மக்கள் இன்னிசைக் கச்சேரி, நடனக் கச்சேரி போன்றவற்றை விரும்புகிறார்கள். தெருக்கூத்தை யாரும் மதிப்பதில்லை. கிராமங்களில் மட்டுமே இந்தக் கலை சில இடங்களில் மட்டுமே நடைபெறுகிறது. அதுவும் கோயில் திருவிழாக்களின் மூலமாகச் சில இடங்களின் அந்தத் தெருக்கூத்து இன்னும் உயிர் வாழ்கின்றது.

தெருக்கூத்துகளுக்கு ஹார்மோனியம், மத்தளம், தாளம், முகவீணை போன்றவை பின்னணி இசைக்காகப் பயன்படுத்தப்பட்டன. இப்பொழுது அவை மறைந்துவிட்டன.

தெருக்கூத்து அழிந்து வருகின்றது. நகர்ப்புறங்களில் அவை என்னவென்றே தெரியவில்லை. கரகாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம், புலி ஆட்டம் போன்ற கலைகளை இன்றைய நிலையில் காண்பது கடினமான ஒன்றாகிவிட்டது. இன்றைய தலைமுறையினர் நம்முடைய பாரம்பரிய கலைகளைப் பற்றி அறிதல் இல்லாமல் இருக்கின்றனர். கலைகளைப் பார்க்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை என்றாலும் கல்வியறிவிலாவது கலைகளைப் பற்றிய அறிவினை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்க வேண்டும். அதற்கு முதலில் நாம் அத்தகைய அறிவுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

**முடிவுரை**

தமிழர்களாகிய நாம்தான் கலைகளைப் பாதுகாக்க வேண்டும். நாமே அதை அழிக்க வழி செய்யக்கூடாது. பாரம்பரிய கலைகளை மீட்டெடுக்கும் விதமாகச் சென்னை தீவுத்திடலில் நம்ம ஊரு திருவிழா நிகழ்வின் மூலம் பல்வேறு நாட்டுப்புறக் கலைகள் நிகழ்த்தப்பட்டன. இதுபோன்ற நிகழ்வுகள் நமது கலையை அடுத்த தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும். எனவே கலைகளை மதிப்போம் அவற்றை அழியாமல் பாதுகாப்போம்.

ரா. கவிதா
இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு

# ஆரோக்கியமான உணவு

**முன்னுரை**

பழங்காலத்தில் வாழ்ந்த மக்களும் அவர்கள் செய்த வேலைகளும் உணவுப் பழக்கங்களும் இன்றைய காலகட்டங்களில் இல்லை. காலத்திற்கு ஏற்றவாறு மனிதர்கள் செய்யும் வேலைகளும் உணவு பழக்கங்களும் மாறுகிறது.

இன்றைய காலத்தில் நாவின் ருசிக்காக மட்டும் உணவு உண்ணுகின்றனர். ஆரோக்கியமான உணவும் சத்தான உணவும்தான், நம்மை ஆரோக்கியமாக வாழ வைக்கும்.

**அமர்ந்து சாப்பிட நேரமில்லை**

இன்றைய காலத்தில் மக்கள் அனைவரும் வேகமாக ஓடிக்கொண்டே இருக்கின்றனர். அப்படி வேகமாக வேலைக்குச் செல்லும்போது நடந்துக் கொண்டே சாப்பிட்டுவிட்டு செல்கின்றனர். இப்படி சாப்பிடுகின்ற உணவு சத்தான உணவாக இருந்தால் பரவாயில்லை. அதுவும் அவர்கள் வேகத்திற்கு ஏற்ப நெகிழி பாத்திரத்தில் அடைத்த உணவு, பதப்படுத்தப்பட்ட உணவு ஆகியவற்றை வேக வேகமாகச் சாப்பிட்டு வேலைக்குச் செல்கின்றனர்.

உணவு உண்ணும் போது தரையில் அமர்ந்து சம்மணம் போட்டு பொறுமையாகச் சாப்பிட்டால்தான் நாம் உண்ணும் உணவு உடம்பில் ஒட்டும். ஆனால் இன்றோ அமர்ந்து சாப்பிடுவதற்கு நேரம் இல்லாமல் நடந்து கொண்டிருக்கின்றனர்.

**மாறிய உணவு முறை**

அந்தக் காலத்திலெல்லாம் காய்கறிகள் கீரை வகைகள் தானிய வகைகள் பழங்கள் போன்ற ஆரோக்கியமான உணவுகளை உண்டு இன்பமாக வாழ்ந்தனர். என்ன வேலை செய்கிறோம் என்ன உணவு உண்ணுகிறோம் என்று தெரியாமல் வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறோம்.

இளைஞர்கள் அனைவரும் நாவின் ருசிக்காக மட்டும் உணவைத் தேடி தேடி உண்ணுகின்றனர். அந்த உணவு ஆரோக்கியமானதா சத்தானதா இதனை உண்ணலாமா இப்படி எதைப் பற்றியும் சிந்திக்காமல் ருசிக்காக மட்டும் உணவை உண்ணும் பழக்கத்தால் நோய்களினால் அவதிப்படுகின்றனர். இவை அனைத்தும் மாறிப்போன உணவுப்பழக்க முறையினால்தான்.

**உணவே மருந்து**

பழங்காலத்தில் மருத்துவ மனைகள் இல்லை. ஆனால், சித்த மருத்துவம் நாட்டு மருத்துவம் என்பது, அன்று உண்ணும் உணவிலேயே மறைந்து இருந்தது. நோய்நொடி இல்லாமல் ஆரோக்கியமாக வாழ்ந்தனர். ஆனால் இன்றோ உணவு உண்பதால் பல நோய்கள் வருகின்றன. இயற்கையாக விளையும் காய்கறி பழங்கள் போல் செயற்கையாக

விளையும் காய்கள் பழுங்களை உண்டு உயிர் வாழ்கின்றனர்.

உணவே மருந்து பழமொழி போய் மருந்தே உணவு என உண்பதால் பல நோய்கள் ஏற்படுகின்றன.

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்

உண்ட உணவு செரித்த தன்மையை ஆராய்ந்து போற்றிய பிறகு, தக்க அளவு உண்டால் உடம்பிற்கு மருந்து என ஒன்று வேண்டியதில்லை. சத்தான உணவுகளை உண்பதால் மட்டும் ஆரோக்கியமாக வாழமுடியாது சரியான முறையில் உணவு உண்பதே ஆரோக்கியத்தைத் தரும்.

கீரை வடை, சிறுதானிய உருண்டை, கம்பு கேழ்வரகு தோசை போன்ற சுவைமிகுந்த சத்தான உணவுகளை உண்டால் ஆரோக்கியமாக வாழலாம்.

சத்தான உணவுகளைச் சாப்பிட்டால் ஆரோக்கியமாகவும் நலமாகவும் வாழலாம் தினமும் உண்ணும் உணவில் காய்கறிகள் பழங்கள் சிறுதானிய வகைகள் சேர்த்து சாப்பிடவேண்டும்

அற்றால் அறவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு

உண்ட உணவு செரித்ததையும், உண்ணும் உணவின் அளவையும் அறிந்து உண்ண வேண்டும். இதுவே நீண்ட நாள் வாழ்வதற்கு வழியாகும்.

முடிவுரை

உணவு விரைவு உணவே இன்று எல்லோருக்கும் உணவானது. இதனால் உடலுக்கு எந்த ஒரு பயனும் இல்லை. எதற்காக வேலை செய்கிறோம் ஒரு சாண் வயிற்றுக்காக தான் ஓடி ஓடி வேலை செய்கிறோம். அந்த வயிற்றில் கண்டதையும் போட்டு நிரப்புவது நம் உயிருக்கு ஆபத்தாக அமைகிறது. எனவே இனிமேல் உண்ணும் உணவில் சத்தான உணவு வகைகளை சேர்த்துக் கொள்வோம் சரியான முறையில் உண்டு ஆரோக்கியமாகவும் நலமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வோம்.

கு. அனிதா
இளங்கலைத் தமிழ்
இரண்டாமாண்டு

## பழமொழிகள்

- அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
- அஞ்சிபுலன் அடக்கினால் அகிலமும் அடங்கும்.
- காலையில் இஞ்சி கடும்பகல் சுக்கு மாலையில் கடுக்காய்.
- முருங்கை உண்ண நொறுங்குமாம் மேகம்.
- வாழை வாழ வைக்கும்.
- பத்து மிளகு இருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம்.

# நூல் அறிவோம்

## பாலைவனப் பூ - வாரிஸ் டைரி




வாரிஸ் டைரி என்பவர் சோமாலியப் பாலைவனப்குதியில் ஒட்டகம் மேய்க்கும் நாடோடி பழங்குடிச் சமூகத்தைச் சேர்ந்தவர். ஆப்பிரிக்காவின் தலைசிறந்த மாடல், நடிகை, எழுத்தாளர், சமூகச் செயற்பாட்டாளர்.

1997 – 2003 வரை அமெரிக்க தூதரகத்தில் நல்லெண்ணத் தூதராகப் பணியாற்றியவர். டெசர்ட் ஃப்ளவர் ஃபவுண்டேஷன் மூலம் உலகின் பல நாடுகளின் பெண் குழந்தைகளைக் காப்பாற்றி வருகிறார். ஆண், பெண் சமத்துவம், பெண்ணுரிமை, பெண் கல்வி, பெண் ஆரோக்கியம், மனித உரிமைகள் போன்றவற்றிற்காகப் போராடுபவர்.

இவரது வாழ்வின் உண்மை சுயசரிதையைப் புத்தகமாக எழுதியுள்ளார். பாலைவனப் பூ வாரிஸ் டெய்ரியால் எழுதப்பட்ட அவரது வாழ்க்கை வரலாறு. இதனை எஸ். அர்ஷியா தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்.

இந்நூலில் சோமாலியப் பெண்ணிற்கு, மதம், கலாச்சாரம் என்ற பெயரில் சடங்காகச் செய்யப்படும் பிறப்பு உறுப்புச் சிதைக்கப்படுதல், அதனால் பெண்ணின் மனநிலை, வாரிஸ் மீண்டு எழுந்ததைக் கூறுவதாக அமைகிறது.

கலாச்சாரத்தின் பெயரால் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமையையும், கொடுமையைக் கொன்ற வாரிஸின் தன்னம்பிக்கையையும் இந்தப் புத்தகம் வெளிப்படுத்துகிறது.

பிறப்புறுப்புச் சிதைக்கப்படுவதால் பெண்கள் பல உடல் பிரச்சினைகளால் பாதிக்கப்படுகின்றனர். உறுப்பு சிதைப்புக்குப் பின்பு, தொற்று, மூத்திர ஒழுக்கு, குழாய்ச் சிதைப்பு, ஆறாத வடுக்கள், மரணம் கூட நிகழலாம்.

ஆப்பிரிக்காவின் 80 விழுக்காடு பெண்களுக்குப் பிறப்புறுப்புச் சிதைவு ஏற்படுகிறது. ஆப்பிரிக்காவில் உள்ள 28 நாடுகளில் நாள் ஒன்றுக்கு 6,000 சிறுமிகள் பாதிக்கப்படுகின்றனர். சிறுநீர் கழிக்க முடியாத வேதனையாலும், மாதவிடாய் நேரத்திலும் பெரிதும் அவதிப்படுகின்றனர்.

இதே பிறப்புறுப்புச் சிதைப்பு வாரிசுக்கும் நடைபெற்றது. இந்த

நிலையிலிருந்து வெகுண்டு எழுந்தவர் வாரிஸ் டைரி. அவர் ஒரு பாலைவனத்தில் பூத்த பூ. அவரின் படைப்பு பாலைவனப் பூ.



அவர், பாலைவனத்தில் இருந்து தப்பி வெளியே வருகிறார். பல இன்னல்களைச் கடந்து ஒரு மிகப்பெரிய மாடலாக இந்த உலகிற்கு அறிமுகமாகிறார்.

பின்னர் வாரிஸ் டைரி ஜேம்ஸ் பாண்ட் படத்தில் கதாநாயகியாக நடித்து இருக்கிறார்.

பெண் என்றாலே ஒரு கவர்ச்சிப் பொருளாகவும், பெண் ஆணுக்காகப் படைக்கப்பட்டவள் என்றும் அவள் கற்புடையவளாகவே இருக்க வேண்டும் என்பதற்காகவும் இத்தகைய உறுப்பு சிதைப்புகள் நடைபெறுகின்றன.

தங்களது சமூக வழக்கத்தையும் ஆணின் மனநிலையையும் மாற்ற யாரும் முயலவில்லை. பெண்களின் உடல் வலியையும் உணரவில்லை.

பெண்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுங்கள். வாரிஸ் டைரியின் முயற்சியாலே ஒரு சமூகம் விடுதலை அடைந்துள்ளது. சமூகத்தின் மூடவழக்கத்தை அடிமைத்தனத்தை மாற்ற நாமும் முயல்வோம் முன்னேற்ற பாதையில் செல்வோம் !....

**பவித்ரா. சா, இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு**

---

# பழமொழி நுண்பொருள்

## பழமொழி - புண்பட்ட மனதைப் புகை விட்டு ஆத்து

நமது மனம் ஏதேனும் துன்பத்தால் புண்பட்டிருக்கும் பொழுது புகை (புகையிலை) கொண்டு ஆற்றிக் கொள்ள வேண்டும் என்பது இப்பழமொழிக்கு நாம் அறிந்த பொருளாகும்.

### உண்மையான பொருள்

பழமொழி என்பது முன்னோர்கள் தங்கள் ஆழ்ந்த அனுபவத்தால் கூறியவையாகும். இவை மனிதனை நல்வழிப்படுத்துவதாக அமையுமேயன்றி, தீய வழியில் இட்டுச் செல்லாது என்பது நாம் அறிந்ததே. இப்படி இருக்க இந்தப் பழமொழி விளக்கும் கருத்து என்னவென ஆய்வோம்.

"புண்பட்ட மனதைப் புக விட்டு ஆற்று" என்பதே இதன் சரியான சொல் அமைப்பு. புக என்பது காலப்போக்கில் புகை எனப் பயன்படுத்துவதால் பொருள் புரிதலில் இடர் ஏற்படுகிறது.

மனது புண்பட்டிருக்கும் போது, துன்பத்தை எண்ணி வருந்திக் கொண்டிருக்காமல் மனதைத் திருப்பி நமக்குப் பிடித்த வேறொரு செயலில் புக விட்டு துன்பத்தை ஆற்றிக்கொள்ள வேண்டும் என்பதே சரியான விளக்கம்.

பவித்ரா. பா, இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு

# அறிவியல் செய்திகள்

## எட்வர்ட் ஜென்னர்

தடுப்பூசி முறையை முதன் முதலில் கண்டுபிடித்தவர் எட்வர்ட் ஜென்னர். எட்வர்ட் ஜென்னர் இங்கிலாந்தின் கிளோசெஸ்டர்ஷயர் மாவட்ட பெர்க்கிலி என்னும் சிறு நகரில் 1749ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் நாள் பிறந்தார்.

இருபத்தி ஒன்றாவது வயதில் லண்டன் சென்று, புதிய ஜார்ஜ் மருத்துவமனையில் மருத்துவம் படித்தார். 1773இல் தம்முடைய சொந்த ஊருக்கே திரும்பினார். அங்கு ஒரு சிறு மருத்துவமனையைத் தொடங்கி, கிராமப்புறத்தில் மருத்துவராகப் பிரபலமானார்.

அந்தக் காலக்கட்டத்தில் இங்கிலாந்தில் பெரியம்மை நோய் கடுமையாகப் பரவியிருந்தது.

இது ஒரு தீவிர தொற்றுநோய், 14ஆம் நாள் மே மாதம் 1796ஆம் ஆண்டு அவருடைய கிராமத்தில் ஒரு பெண்ணுக்கு மட்டும் அம்மை நோய் தாக்கியிருந்தது. அப்பெண்ணின் கையிலிருந்த அம்மைக் கொப்பளத்தில் இருந்து சிறிது திரவத்தை ஒரு சிரிஞ்சி மூலம் உறிஞ்சி எடுத்தார். நோயற்ற 8 வயது சிறுவன் ஜேம்ஸ்பிலிப்ஸ் என்பவனின் கையில் அதைச் செலுத்தினார்.



சில வாரங்களில் அவனுக்கு மட்டும் அம்மை நோய் வந்தது. ஆனாலும் அவன் மிக விரைவிலேயே குணமானான். ஜூலை 1ஆம் நாள் பெரியம்மை நோய் வந்த ஒருவனின் அம்மை கொப்பளத்தில் இருந்து சிறிது திரவத்தை எடுத்து அதே பையனுக்குக் கையில் செலுத்தினார். இப்போது அப்பையனுக்கு பெரியம்மை நோய் ஏற்படவில்லை. அவர்

நினைத்தது போலவே அவன் உடலில் பெரியம்மை நோய்க்கு எதிர்ப்புத் தன்மை உண்டாகியிருந்தது. ஆனால் இதை அன்றைய மருத்துவ உலகம் ஏற்றுக் கொள்ளவில்லை. என்றாலும், ஜென்னர் மனந்தளரவில்லை. உடனே லண்டன் சென்றார். அங்கு மூன்று மாதங்கள் தங்கியிருந்து தொண்டு உணர்வுடன் பலருக்குத் தடுப்பூசி செலுத்தினார்.

இவர் 'நோயெதிர்ப்புத் துறையின் தந்தை' என்று அழைக்கப்படுகிறார். மேலும் அவரது பணி மிக மிக உன்னதமானது என்று அவரது அற்புதக் கண்டுபிடிப்பைப் பாராட்டியது அன்றைய இங்கிலாந்து அரசாங்கம்.

**சித்திகா பிர்தோஸ். ர, இளம் வணிகவியல், இரண்டாமாண்டு**

# உணவே மருந்து

## பெரிய புராணம் கூறும் மருத்துவம்

உலகில் உள்ள உயிர்கள் பல. அவற்றுள் மக்கள் பிறவியே மகத்தானது. உடலும் உயிரும் இணைந்து செயல்பட்டால் உன்னத இன்பத்தை உணரலாம். அவ்வகையில் இறைத்தன்மையால் ஏற்பட்ட நோய்கள் இறைத்தன்மையாலேயே நீங்கப் பெறுவது, இறையடியவரால் உண்டாக்கப்பட்ட நோய் இறையடியவராலேயே போக்கப்படுவது முதலிய நிகழ்வுகள் மருத்துவக் கலையாய் மிளிர்ந்து பெரிய புராணம் வழி எவ்வாறு உணர்த்தப்பட்டது என்பதைக் காணலாம்.

சூலைநோய், வெப்பு நோய், மலைச்சுரம், முயலகன் நோய் முதலான நோய்கள் பெரியப் புராணத்தில் குறிப்பிடப்படுகின்றன. இதில் சூலைநோய் என்பது வயிற்று வலியாகக் கூறப்படுகின்றது. திருநாவுகரசருக்கு ஏற்பட்ட இந்நோய் திருநீறுப் பூசுவதன் வழி போக்கப்பட்டது. இறைத்தன்மையால் ஏற்பட்ட இந்நோய் இறையருளால் நீக்கப்பட்டது என்பதைப் பின்வருமாறு உணரலாம்.

**கூற்றான வாறுவி லக்கலீர்**
**கொடுமைபல செய்தன நான் அறியேன்**
(பெரியப்புராணம் - 1335)

வெப்புநோய் என்பது உடல் தீப்போல் எரியும் என்பதாகக் குறிப்பிடப்படுகிறது. மதுரை மன்னன் நின்றசீர் நெடுமாறனுக்கு ஏற்பட்ட இந்நோயினை அவர் மனைவி மங்கம்மாளின் வேண்டுகோளுக்கு இணங்கி சம்பந்தர் போக்கினார். இவ்விதம் இறையடியவரால் ஏற்பட்ட நோய் இறையடியவராலேயே நீக்கப்பட்டது என்பதைப் பின்வருமாறு அறியலாம்.

**தென்னவன் நோக்கங் கண்டு திருக்**
**கழுமலத்தார் செல்வர்**
**அன்னவன் வலப்பால் வெப்பை**
**ஆலவாய் அண்ணல் நீறே**
**மன்னும் மந்திரமும் ஆகி**

**மருந்துமாய் தீர்ப்பது என்று**
(பெரியப்புராணம் - 2662)

முயலகன் நோய் என்பது ஒருவகை வலிப்பு நோய். இந்நோய் கொல்லி மலையைச் சார்ந்த மழவன் மகளுக்கு ஏற்பட சம்பந்தர் போக்கியதாக அறியமுடிகிறது.

**மணிவளர் கண்டரோ மங்கையை வாடாமல்**
**செய்வதோ இவர் மாண்படுவதென்று**
(பெரியப்புராணம் – 2216)

**தொகுப்பாக**

- இறைத்தன்மையுடன் இணைந்த மருத்துவ நிலை பெரியப்புராணத்தில் கூறப்படுகிறது.
- மருத்துவ குணம் நிறைந்த இயற்கைப் பொருள்களின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகிறது என்பதை அறிய முடிகிறது.

அ. ஸ்டெல்லாமேரி
முதுகலைத் தமிழ், இரண்டாமாண்டு

# விடுகதைகள்

❖ *ஒரு மரத்துக்கு ஈராறு கிளைகள். கிளை ஒன்றுக்கு முப்பதிலைகள்.*
*ஒரு பாதி வெளுப்பு. ஒரு பாதி கறுப்பு.*
*உண்மையைப் பஞ்சாங்கமதில் உணருவீரே.*

❖ *பச்சைபச்சை யென்றிருக்கும் பாவக்காயன்று.*
*பக்கமெல்லாம் முள்ளிருக்கும் பலாக்காயுமன்று.*
*உள்ளே வெளுத்திருக்கும் தேங்காயுமன்று.*
*உருக்கினால் நெய்வடியும் வெண்ணெய்தானுமன்று.*

❖ *மூன்று தலை. பத்துக் கால். இரண்டு வால். ஆறு கண்.*
*இரண்டு கை. நான்கு கொம்பு. அவை என்ன?*

❖ *அண்ணன் தம்பி இரண்டுபேர். தம்பி ஒரு சுற்றுச் சுற்றினால்,*
*அண்ணன் பன்னிரண்டு சுற்றுச் சுற்றுவான்.*

❖ *சட்டையைக் கழற்றியதும்*
*சட்டென்று உள்நுழைந்தான். அவன் யார்?*

*இராசிகா. ஶ்ரீ, இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு*

# தமிழ் வருடப் பிறப்பு

**கல்தோன்றி மண்தோன்றா காலத்தே வாளொடு**

**முன்தோன்றிய மூத்த குடி**

***உலக தமிழர்களின் சிறப்புமிக்க நாள் சித்திரை முதல் நாளே!***

*பழம் பெருமையை உடையத் தமிழர் ஒவ்வொருவரும் சித்திரை முதல் நாளை (ஏப்ரல்-14) தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடுகின்றனர்.*

*இத்திருநாள் இந்தியா, மலேசியா, இலங்கை, சிங்கப்பூர், கேரளா போன்ற நாடுகளில் வாழும் தமிழ் மக்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது.*

*தமிழர்களது காலக்கணிப்பு முறைப்படி ஓர் ஆண்டிற்குரிய பன்னிரண்டு மாதங்களில் சித்திரை முதலாவது மாதம் ஆகும். தமிழ் மாதங்கள் சூரியனுடைய இயக்கத்தை அடிப்படையாக வைத்து கணிக்கப்படுவதால். தமிழ் மாதங்கள் சூரிய மாதங்கள் எனப்படும்.*

*இராசிச் சக்கரத்தில் மேட ராசிக்குள் சூரியன் நுழைவதில் இருந்து, அந்த இராசியை விட்டு வெளியேறும் வரையிலான காலம் சித்திரை மாதமாகும்.*

*மதுரை மாநகரில் சித்திரை முதல் நாளானது பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டுவருகிறது.*

*மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் மற்றும் கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்குதல் என்ற இரண்டும் ஒன்று சேர இத்திருவிழாவானது நடைபெறுகிறது.*

**திண்ணிலை மருப்பின் ஆடுதலையாக விண்ணூர்பு**

**திரிதரும் வீங்குசெலல் மண்டிலத்து**

*எனும் சங்க இலக்கிய நெடுநல்வாடைப் பாடல் வரிகளில் சித்திரை மாதத்தின் பிறப்பு குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இப்புத்தாண்டின் முதற்நாளில் முக்கனி வழிபாட்டினைத் தமிழர்கள் கொண்டிருந்தனர். முக்கனியானது மா, பலா, வாழை இவற்றுடன் வெற்றிலைப் பாக்கு, நகை, நெய் போன்றவற்றை மங்களத் தட்டில் வைத்து புத்தாண்டு அன்று*

அதிகாலையில் வழிபாடு செய்வது வழக்கமாக இருந்து வருகிறது.

கசப்பும் இனிப்பும் கலந்ததே மனித வாழ்க்கையாகும். அவற்றைப் போல புத்தாண்டிலும் கசப்பும், இனிப்பும் கலந்துள்ளது என வேப்பம்பூப் பச்சடி, மாங்காய்ப் பச்சடி இரண்டினையும் வைத்து வழிபடுவது மரபாகும்.

பிறமொழிகளில் கொண்டாடப்படும் புத்தாண்டினை உகாதி, விசு, சங்கராந்தி போன்ற பெயர்களில் அழைப்பர். சித்திரை மாதம் பௌர்ணமி நாளன்று சித்திரை நட்சத்திரம் வரும். அம்மாதத்தின் பெயரே சித்திரை எனவும் குறிக்கப்படுகிறது.

*சித்திரையே வா! நம் வாழ்வில் நல் முத்திரை பதிக்கவா!*

எனத் தெய்வத் திருமதுரை ஆதீனம் கூறியுள்ளார். சித்திரை முதல் நாள் வழிபாடானது நாடு செழிக்க வேண்டும். நாட்டு மக்கள் செல்வத்தையும் பல்வேறு நற்பலன்களையும் பெறவேண்டும் என அனைவரும் இந்நாளை வழிபடுகின்றனர்.

எனவே இத்திருநாளினை நாமும் நம் குடும்பத்தாருடன் வழிபட்டு சிறந்த நற்பலன்களைப் பெறுவோம்.

*கதீர்வீசும் முதல் நாளே!!!*
*தமிழர்ச் சித்திரைத் திருநாளே!!!*

அனைவருக்கும் இனிய தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

**பெ. சாந்தி**
**முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு**

# ஈஸ்டர் திருநாள்

உலகத்தில் கோடிக்கணக்கான மக்களால் பின்பற்றக்கூடிய மதங்களில் ஒன்றுதான் கிறிஸ்தவ மதம். கிறிஸ்தவர்களால் கிறிஸ்துமஸிற்கு அடுத்து மிக முக்கியமாகக் கொண்டாடப்படும் பண்டிக்களில் ஒன்று ஈஸ்டர் பண்டிகை. கிறிஸ்தவர்கள் இந்த ஈஸ்டர்

*தினத்தை உயிர்ப்பு ஞாயிறு, ஆண்டவரின் உயிர்ப்புப் பெருவிழா அல்லது பஸ்கா என்று அழைக்கின்றனர். 29ஆம் நூற்றாண்டிலிருந்து உலகம் முழுவதும் ஈஸ்டர் பண்டிகை கொண்டாடப்பட்டு வருவதாக வரலாறு கூறுகிறது.*

*இறந்தோரை உயிர்பித்து, தான் தேவகுமாரன் என்பதை நிரூபித்த இயேசுவை அப்போதைய யூத மதத் தலைவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் கல்வாரி மலையில் முள்கிரீடம் சூட்டப்பட்டு ரோமானியர்களால் சிலுவையில் அறைந்து, சிலுவைப்பாடுகளை அனுபவித்த போது, அவர் உடல் முழுவதும் கிட்டத்தட்ட 5,466 விழுப்புண்கள் இருந்தாகக் கூறப்படுக்கிறது. இறந்த மூன்று நாட்களுக்குப் பிறகு ஈஸ்டர் நிகழ்ந்ததாக நம்பப்படுகிறது.*

*இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முன்தினம் இரவு அவருடைய சீடர்களுடன் பஸ்கா உணவைப் பகிர்ந்து கொண்ட தினம் "பரிசுத்த வியாழன்" அதாவது "மான்டி வியாழன்"( Maundy Thursday) நினைவு கூறப்படுகிறது. புனித வெள்ளியன்று இயேசு கிறிஸ்து கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார். பாலஸ்தீன நாட்டின் பாரம்பரியப்படி, ஒருவர் இறந்த மூன்று நாட்களுக்குப் பிறகு, கல்லறைக்கு அவருடைய உறவினர்கள் சென்று வருவது வழக்கம். ஏனென்றால் முதல் மூன்று நாட்கள் இறந்தவரின் ஆவி கல்லறையைச் சுற்றி வந்து, தன்னுடைய உடலுக்குள் மீண்டும் செல்ல முயற்சி செய்யும் என்பது யூதர்களின் நம்பிக்கை.*

*ஆனால், மூன்று நாட்களுக்குப் பின் உடல் அழுகி விடுவதால் ஆவிக்குத் தன்னுடைய உடலை அடையாளம் காண முடியாமல் தனது உலகத்திற்குத் திரும்பிவிடும். வாரத்தின் முதல் நாள் என்பது ஞாயிற்றுக்கிழமை. முந்தைய நாளான சனிக்கிழமை மாலை அல்லது இரவில் தொடங்கி ஞாயிற்றுக்கிழமை வரை தொடரும் வகையில் இந்தப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. வாரத்தின் முதல் நாளன்று விடியற்காலையில் இருள் நீங்கும் முன்பே மரியா கல்லறைக்குச் சென்றார். கல்லறை வாயிலில் இருந்த கல் அகற்றப்பட்டு இருப்பதைக் கண்டார். "ஆண்டவரைக் கல்லறையிலிருந்து யாரோ எடுத்துக் கொண்டு போய்விட்டனர் அவரை எங்கே வைத்தனரோ எங்களுக்குத் தெரியவில்லை!" என்றார். இதனைக் கேட்ட பேதுருவும் மற்றச் சீடரும் கல்லறைக்குப் புறப்பட்டனர். அப்போது அக்கல்லறையில் துணியையும் அவர் தலையை மூடியிருந்த துண்டையும் கண்டனர். இயேசுவின் மறைச்சொல்லை நம்பினர்.*

*இவ்வாறு மரணத்தை வென்று இயேசு உயிர்த்து எழுந்த நாளை ஈஸ்டர் தினமானகக் கொண்டாடுகின்றனர். ஈஸ்டர் பண்டிகை ஒரு வசந்தக் காலத் தொடக்கத்தில் கொண்டாடப்படுகிறது. இந்த மாதத்தில் ஈஸ்டர் மலர்கள் பல நிறங்களில் பூத்துக்குலுங்கி மகிழ்விக்கும் இந்தப் பண்டிகையின் முக்கிய அம்சம் அலங்கரிக்கப்பட்ட முட்டைகள்.*

ஈஸ்டர் நாளன்று முட்டை மறைத்து வைக்கப்பட்டு, பரிசாக வழங்கப்படும். முட்டை அலங்கரித்தல் போன்ற விளையாட்டுகளும் அடங்கும். பாரம்பரியமாக ஈஸ்டர் முட்டைகள் சிவப்பு நிறம் பூசப்பட்டு வருகிறது. அது இயேசு சிலுவையில் சிந்திய இரத்தத்தைக் குறிக்கிறது. முட்டையின் கடின ஓடு கிறிஸ்துவின் மூடப்பட்ட கல்லறையையும் அதனை உடைப்பது மரணத்திலிருந்து அவர் உயிர்த்தெழுந்ததனையும் குறிக்கிறது.

ஆண்டுக்கு ஒருமுறை பூக்கக்கூடிய அதிசய பூ லில்லி. இந்தப் பூ கோடைகாலமான ஏப்ரல், மே மாதங்களில் மட்டுமே பூக்கக் கூடியது. இந்தப் பூ, பூத்த நாள் தொடங்கி 15 நாட்கள் வரை வாடாமல் அப்படியே இருக்குமாம். கிழங்கு வகைகளைச் சேர்ந்த இந்தப் பூவும் ஈஸ்டர் பண்டிகை நாட்களில் பூப்பதால் இப்பூவிற்கு ஈஸ்டர் லில்லி என்ற பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது. மேலும், வெள்ளை நிற லில்லி மலர் உயிர்த்தெழுதலின் சின்னமாகக் கருதப்படும் . அது ஈஸ்டர் சிறப்பு மலராகவும் போற்றப்படுகிறது.

ஈஸ்டர்தினத்திற்கு 40 நாட்களுக்கு முன் இருந்து ஈஸ்டர் தினத்திற்காகக் கிறிஸ்தவர்கள் விரதம் இருப்பர். அதாவது சாம்பல் புதன் கிழமை அன்று தொடங்கும் 40 நாட்கள் நோன்பு, ஈஸ்டர் பண்டிகையுடன் முடிவு பெறும். தவக்காலம் என்று சொல்லப்படும் இந்த காலகட்டத்தில் பல்வேறு விரத முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அதாவது உபவாசம், தர்ம காரியங்களில் ஈடுபடுதல், சிலுவைப்பாதை செய்தல் மற்றும் பல காரியங்களை அவரவர் தகுதிக்கு ஏற்றவாறு செய்வார்கள். சிலர் தினமும் ஒரு வேளை அல்லது இரு வேளை சாப்பாடு மட்டுமே சாப்பிடுவார்கள். இன்னும் சிலர் இறைச்சி உணவுகளைத் தவிப்பார்கள், 40 நாட்களும் சில பெண்கள் தலையில் பூ வைக்காமல் இருப்பார்கள், வேறு சிலர் கேளிக்கை நிகழ்ச்சிகளைத் தவிர்ப்பார்கள்.

இவ்வாறு சடங்குகளையும் தவத்தையும் மேற்கொண்டு சிலுவையில் அறையப்பட்டு மரணித்த ஏசுபிரான் மீண்டும் உயிர்த்தெழுந்த வரவிற்காகக் கொண்டாடப்படும் பண்டிகை ஈஸ்டர் திருநாள், அகத்தின் மரணத்தை வென்று நிஜ வாழ்க்கையின் அர்த்தத்தை விளக்குகிறது.

அஞ்ஞானத்திலிருந்து விடுதலை பெற்று ஆன்மிகத்தை உணர்த்துவதாக ஈஸ்டர் பண்டிகையுள்ளது.

கிறிஸ்தவர்களுக்கு மட்டுமின்றி அனைவரும், வாழ்வில் மறைபொருளை உணர்த்தும் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவோம்.

**மு. ரம்யா**

**இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு**

# இசைக் கருவிகள்

## யாழ்



யாழ் பண்டைய இசைக்கருவிகளில் மிகச் சிறப்பு வாய்ந்தது. யாழ் என்பதற்கு யாக்கப்பட்டது அல்லது கட்டப்பட்டது என்பது பொருள். யாழ் இப்போது பயன்பாட்டில் இல்லை. யாழ் நரம்புக் கருவி வீணை எனப் பெயர், உருவ மாற்றம் பெற்றுப் பயன்பாட்டில் உள்ளது. யாழ் பயன்பாட்டில் இல்லை.

இசையைத் தோற்றுவிக்கும் கருவிகளைத் தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, மிடற்றுக் கருவி என்று வகைப்படுத்துவர். நரம்புக் கருவியாகிய யாழே தமிழர்கள் வாசித்த முதல் இசைக்கருவி. ஹரப்பா நாகரிகத்திலும் யாழ் காணப்படுகிறது.

***21 நரம்புக் கொண்டது பேரியாழ்***

***17 நரம்புக் கொண்டது மகர யாழ்***

***16 நரம்புக் கொண்டது சகோட யாழ்***

***7 நரம்புகளைக் கொண்டது செங்கோட்டியாழ்***

நரம்புகளின் எண்ணிக்கையைக் கொண்டு யாழ் வகைப்படுத்தப்பட்டது.

### யாழ் உறுப்புகள்



பத்தல், கோடு, ஆணி, வெண்கை, நரம்பு, பச்சை, போர்வை, திவவு ஆகிய உறுப்புகள் எல்லா யாழிலும் காணப்படும். யாழ் இசைக்கும் பாணர் குழுக்கள் இருந்ததை இலக்கியங்கள் வாயிலாக அறியலாம். ஆற்றுப்படையில் பெரும்பாணர், சிறும்பாணர் சீரியாழ், பேரியாழ் வாசித்ததாகக் குறிப்புகள் உள்ளன.

தொல்காப்பியம் தொடங்கி அகநானுறு, புறநானூறு, நற்றிணை, பாணாற்றுப்படை, பரிபாடல், மலைபடுகடாம் முதலிய சங்க இலக்கியங்கள், இடைக்கால இலக்கியங்கள், காப்பியம், பக்தி இலக்கியங்களில் யாழ் பற்றிய குறிப்புகள் இடம் பெறுகின்றன. தொல்காப்பியத்தில்,

இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்



மாத்திரை நீண்டு ஒளிக்கும் போது யாழ் இசையின் இலக்கணத்தில் உள்ளவாரே கொள்க, எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

*சீர் இனிது கொண்டு நரம்பு இனிது இயக்கி*
*யாழேர் மருதம் பண்ணை (மதுரை – 657-658)*
*புரிநரம்பின் கொளைப் புகல் பாலை யேழும்*
*எழூப்புணர் யாழும் (பரி – 77,78)*

போன்று யாழினைக் குறித்த வரலாறுகள் இலக்கியங்களில் காணக்கிடைக்கின்றன.

**து. லீலாவதி**
**இளங்கலைத் தமிழ், முதலாமாண்டு**

---

# பொன்மொழிகள்

எவன் பிறர் நற்செயல்ளைப் பார்த்து
மகிழ்ச்சி கொள்ளவில்லையோ
அவனால் நல்ல செயல்கள் எதையும் செய்ய முடியாது.

ஜேம்ஸ் ஆலன்

மின்மினிப் பூச்சி எவ்வளவு ஒளியுடன் இருந்தாலும்
அது தீ ஆகாது.

சாணக்கியர்

மனிதனை மனிதனாக்குபவை
உதவிகளும் வசதிகளும் அல்ல
இடையூறுகளும் துன்பங்களுமே.

மாத்யூஸ்

அறிவுத் தேவையை விட
கவனக் குறைவுதான் அதிகக் கஷ்டத்தை
உண்டாக்கி விடுகிறது.

சர்ச்சில்

மகிழ்ச்சி என்ற உணர்ச்சி இல்லாவிட்டால்
வாழ்க்கை சுமக்க முடியாத பெரிய சுமையாகிவிடும்.

பெர்னாட்ஷா

**ஏ. இளமதி, இளங்கலைத் தமிழ், முதலாமாண்டு**

# கடித இலக்கியம்

## அன்புள்ள தோழி,

நீ நலமா? உன் பெற்றோர் நலமா? நான் நலம். கடந்த மாதம் நான் என் துறை மாணவிகளோடு புத்தகக் கண்காட்சிக்குச் சென்றேன்.

நான் என் தோழிகளோடு எந்த இடத்திற்கும் சென்று மகிழ்ந்ததில்லை. என் தோழிகளோடு ஒன்றாகப் பேருந்தில் பயணம் செய்து, அவர்களோடு பேசி, மகிழ்ச்சியாகப் பாடல்களைப் பாடி மகிழ்வாகச் சென்றேன்.

அதோடு, அந்தக் கண்காட்சியில் எங்குப் பார்த்தாலும் பொன்னியின் செல்வன் புத்தகம் வைக்கப்பட்டிருந்தது. அதனைப் பார்த்ததும், எனக்கு அதனைப் படிக்கும் ஆவல் அதிகமானது!

நான் இதுவரை காணாத அளவுக்குப் பல புத்தகங்களைப் பார்த்தேன். சிறுவர்களுக்கான வண்ணம் தீட்டும் புத்தகம், அகர முதலி புத்தகம், சிறுகதைகள் தொடங்கி அறிவியல் சார்ந்த பல புத்தகங்களைப் பார்த்தேன். தமிழ் மொழி சார்ந்த புத்தகங்கள், ஆங்கிலம் மொழி சார்ந்த புத்தகங்கள், கணிதம் சார்ந்த புத்தகங்கள், அறிவியல் புத்தகங்கள், வணிகம் சார்ந்த புத்தகங்கள் என அனைத்துச் துறைச் சார்ந்த புத்தகங்களும் அங்கே வைக்கப்பட்டிருந்தன.

நேரக் குறைப்பாட்டால் எங்களால் முழு கண்காட்சியையும் பார்க்க முடியவில்லை. ஆனால், பார்த்த வரையில் என் மனம் முழுவதும் அந்தப் புத்தகக் கண்காட்சி மட்டுமே இருந்தது. அங்கு, ஓர் இடத்தில் கேமரா இருந்தது! அதனைக் கடந்து செல்லும் போது நம் உருவம், அதனோடு தொடர்புடைய தொலைக்காட்சியில் தெரிந்தது. அதனைப் பார்க்கவே பல முறை அங்கே சென்றோம்!!

அன்றைய நாளில் புத்தகக் கண்காட்சி நடைபெறும் இடத்திற்கு, பல எழுத்தாளர்கள் வருகைத் தந்தனர். அவர்களைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்ததில் பெரு மகிழ்ச்சி அடைந்தோம்!! மிகவும் பயனுள்ள வகையில் அந்தக் கண்காட்சி அமைந்தது.

நான் என் இளைய சகோதரர், சகோதரிக்காக இரண்டு வண்ணம் தீட்டும் புத்தகங்கள் வாங்கி வந்தேன். அதனைப் பார்த்ததும், அவர்களுடைய மகிழ்வானது, அவர்கள் தீட்டும் வண்ணக் கலவையில் தெரிந்தது. மேலும், அவர்கள் அந்தப் புத்தகத்தை மிகவும் கவனமாகப் பார்த்துக் கொண்டனர். படத்திற்கு ஏற்ப வண்ணம் தீட்டி மகிழ்ந்தனர்.

கண்காட்சிக்கு அருகிலேயே கீழடி அகழாய்வு போன்ற மாதிரி கண்காட்சியும் அங்கு நிறுவப்பட்டிருந்தது. ஆனால், நேரம் இல்லாமையால் எங்களால் அங்குச் செல்ல இயலவில்லை. ஆனால் நாங்கள் மிகவும் ஆர்வமாக இருந்தோம்.

மேலும், அந்தக் கண்காட்சி பல நாட்களாக நடைபெற்று வந்ததையும் அறிந்தோம். மீண்டும் ஒரு நாள் விடுமுறை நாட்களில் அது போன்ற கண்காட்சி நடைபெறும் இடத்திற்குச் செல்ல ஆசையாக உள்ளது. நீயும் என்னுடன் இணைந்து வர ஆசைக் கொண்டுள்ளேன்.

உன் ஆர்வத்தை அடுத்து வரும் கடிதத்தில் எதிர்ப்பார்த்து இருப்பேன்!!

**சா. யோகேஸ்வரி, முதுகலைத் தமிழ், முதலாமாண்டு**

---

## விடுகதை விடைகள்

☞ ஆண்டு, திங்கள், தேய்பிறை, வளர்பிறை

☞ ஆமணக்கு

☞ ஏர் உழும் மாடுகள், மனிதன்

☞ கடிகார முட்கள்

☞ வாழைப்பழம்

---

# சிறுகதை - ஒற்றுமையே பலம்

ஓர் ஊரில் பண்பாடு நிறைந்த கிராமத்தில் தந்தை, தாய் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு நான்கு மகன்கள். அந்தத் தந்தை சிறப்புடனும் வசதியுடனும் நன்றாக வாழ்ந்து கொண்டிருந்தார். ஒரு காலகட்டத்தில் அவருடைய மகன்கள் மனநிலைமை சரியில்லாமல்

வாக்குவாதம் செய்தார்கள். சில பல காரணங்களால் அண்ணன் தம்பிகளுக்குப் பிரச்சினைகள் வந்தது.

அவர்கள் தன் தந்தையிடம் அவருடைய சொத்துக்களைப் பிரித்து தருமாறு கேட்க, அவர் யோசித்து முடிவெடுத்து ஒரு கேள்வி எழுப்பினார். நான் சொல்வதை எல்லாம் நீங்கள் செய்ய வேண்டும். செய்த பின்னர் இந்தச் சொத்துக்களைப் பிரித்துத் தருகிறேன் என்றார்.

மறுநாள் மகன்கள் வந்தார்கள். தந்தை அவர்களிடம் ஒரு குச்சியைக் கொடுத்தார். 4 மகன்களிடமும் அதை உடைக்குமாறு சொன்னார். மகன்கள் அந்த ஒரு குச்சியை எளிதாக உடைத்தார்கள். அதன் பிறகு அவர்களுக்கு கட்டாகக் குச்சிகளைக் கொடுத்தார். மறுபடியும் அந்தக் கட்டு நிறைந்த குச்சிகளை உடைக்கச் சொன்னார். இந்த முறை நான்கு மகன்களும் அக்கட்டுக் குச்சிகளை உடைக்க மிகவும் சிரமப்பட்டனர்.

அப்பொழுது அவர்களுடைய தந்தை தன் மகன்களிடம் சிறிய அறிவுரை கூறினார். அது என்னவென்றால் நீங்கள் தனித்து இருந்தால் ஒரு குச்சியை உடைத்தது போல் உங்களையும் எளிதாக உடைத்து விடுவார்கள். ஆகவே அக்கட்டுக் குச்சியைப்போல் ஒன்றாக இருந்தால் உங்களை எவரும் எளிதாக வீழ்த்த முடியாது. எனவே நீங்கள் நால்வரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் எந்தக் கருத்து வேறுபாடும் நால்வருக்குள்ளும் எழக்கூடாது என்றார்.

இச்சிறுகதை மூலம் ஒற்றுமையாக இருப்பது நன்மை உண்டாகும் என்ற அறம் உணர்த்தப்பட்டிருக்கிறது.

**தாரணி. கி, முதலாமாண்டு, இளமறிவியல் கணிதவியல்.**

# சொல் விளையாட்டு

## மலர்களைத் தேடுவோம்!!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | ரு | க | ஷ் | ர | வ | தை |
| கு | வ | ளை | ரை | ஹ | ந் | ய |
| டி | ரை | வி | சே | ர | ல் | ழ் |
| ப | ஆ | ரு | க | ட | மு | ஆ |
| ழ் | சி | செ | மௌ | வ | ல் | ஜா |
| ஞ் | யா | ரு | ட | பா | லை | ம |
| கா | அ | னி | ச் | ச | ம் | வ |

# கவிதைகள்

## அண்ணனின் அன்பு

அப்பாவின் மறு உரு அண்ணன்

அன்பின் மறு சொல்லும் அண்ணன்

அன்னம் ஊட்டும் போது அம்மாவாக

மிதி வண்டி ஓட்டும்போது அப்பாவாக

பாடம் கற்பிக்கும் போது ஆசிரியராக

நல்வழி சொல்லும் போது நண்பனாக

வாழ்க்கையின் எல்லா பகுதியிலும்

உரமாக உறவாக நிற்கும்

அண்ணனின் பாசம்

திரைப்படத்தில் மட்டுமல்ல
நிஜ வாழ்விலும் பாசம் அனுபவித்த
ஒவ்வொரு பாக்கியசாலிக்கும்
அண்ணன் என்றும் ஹீரோதான்

**ரா. காயத்ரி, உயிர்வேதியியல், முதலாமாண்டு.**

## இயற்கை என் காதலி

இளம் காலை இலை மேல் துளியாவாள்
பனியில் இதம்தரும் வெயிலாவாள்
வயலில் விளைந்த கதிராவாள்
ஆழியின் அடியில் முத்தாவாள்
மழலை உதிர்க்கும் மொழியாவாள்
உருவில் கோவில் சிலையாவாள்
தாகம் தீர்க்கும் நீராவாள்
மழையைப் பொழியும் முகிலாவாள்
வெப்பம் மறைக்கும் திரையாவாள்
அவனின் நினைப்பில் சிறையாவாள்
கருத்திடும் வானில் பிறையாவாள்
என்னில் உறைந்த உயிர் ஆவாள்
காதல் புரியும் கவியாவாள்
தேன்போல் தெவிட்டா சுவையாவாள்
வானவில் வண்ண நிறமாவாள்
கானம் சிந்தும் குயிலாவாள்
ரௌத்திரம் தெறித்த அக்கினியாய்
இன்சொல் புகுத்தும் இளம் தளிராய்
மெல்லிசை தவழும் மென்மையாய் திகழும்
இயற்கை என் காதலி

**மேரி பெர்னத் முஹாயின். கை, இளமறிவியல் உயிர்வேதியல், முதலாமாண்டு**

# அம்மா

*மறந்து நேசித்த உறவு நீ*
*என்னை,*
*மறக்க யோசித்த உறவு நீ*
*என்னை,*
*மறந்து சுவாசித்த உறவு நீ*
*உன்னை,*
*நினைக்க மனமுண்டு*
*மறக்க நினைவுண்டு*
*இழக்க மனமில்லை*
*கண்ணீர் !*
*துடைக்க நீ இல்லை*
*பிரிவால் வாடுகிறேன்*
*நினைவால் ஏங்குகிறேன்*
*மடியில் சுமந்த உன்னை*
*மனதில் சுமக்கிறேன்*
*நிஜமாய் அனைத்த உன்னை*
*நினைவால் அனைக்கிறேன்*
*கண்ணீர் துளியால் அழைக்கிறேன்!!!*

**ஐ.ஜோதிகா**
**இளங்கலை ஆங்கிலம், மூன்றாமாண்டு**

# அம்மா

உதிரம் எழுந்து உயிர் கொடுத்து
கைபிடித்து அடி வைக்கக் காத்திருந்து
பேசாமல் பேசும் மழலைப் பேச்சால்
மூர்ச்சித்து மகிழ்ந்தவள்
காய்ச்சல் வரும்போது கட்டி அணைத்து
காயங்களில் காவல் இருந்து
எனக்காகவே காலங்களை அர்பணித்து
கன நேரத்தில் உன் கனவையும் கண்டு
திருமணம் நமை பிரிப்பினும்
மனதால் பிரியாமல் தவிப்பவள்
நித்தம் எனக்காய் இருப்பவள்
மூன்று எழுத்துத் தாயவள்

**பார்வதி. சே**
**இளங்கலை ஆங்கிலம், மூன்றாமாண்டு**

## கடவுள்

என் கண்கள் தேடுகிறது
உன் உருவத்தைக் காண
என் காதுகள் விரும்புகிறது
உனது வார்த்தைகளைக் கேட்க
என் கைகள் தவிக்கிறது
உன் பாதங்களைத் தொட்டு வணங்க
என் கால்கள் நடக்கிறது
நீ இருக்கும் இடத்தைத் தேடி
என் இதயம் துடிக்கிறது
இவையெல்லாம் எப்பொழுது நடக்க
பிறகு தான் புரிந்தது
உதவும்போது உதவி புரிபவர்
கடவுளாகவே தெரிவார் என்று
என் மனம் அமைதி கொண்டது
தேடலில் வெற்றி கண்டது

பவித்ரா. செ
இளங்கலைத்தமிழ், முதலாமாண்டு

## தாய்மொழி

நாவில் சுவைக்கும் இன்மொழி தாய்மொழியே

உயிரினும் மேலான தொன் மொழி

செம்மொழி சிறப்புப் பெற்று

தமிழ் தலை நிமிர்ந்தது

நம் பிறப்பு முதல் இறப்பு வரை

மாறாதது நம் தாய்மொழி

இறப்பே இல்லாத உயர் தமிழ்மொழியே

இவ்வுலகில் எத்தனையோ மொழிகள் உண்டு

மனிதனின் அடையாளம் மொழி

தமிழனின் மதிப்பு தாய் மொழி!!!

ம.நந்தினி, கணினிப்பயன்பாட்டியல், முதலாமாண்டு.

## இயற்கையைப் பாதுகாப்போம்

பட்டாம்பூச்சி இருந்த இடம்

பாலைவனம் ஆச்சு ...

பூமி எங்கும் தோன்றும் தண்ணீர்

எங்கே போச்சு ...

மரங்கள் எல்லாம் இருந்த இடம்

சுடுகாடா ஆச்சு ...

மனிதா உனக்கு இல்லையா?

மனசாட்சி ...

ஒரு போதும் நம்பாதே அரசியல் ஆட்சி

வா நண்பா நாம் செய்வோம் ஒரு புரட்சி ...

அன்று பாரதம் அடையும் மீட்சி ...

அதற்கு நாம்தானே சாட்சி ...

வினோதினி. இ
வணிகக் கூட்டாண்மைச் செயலரியியல், மூன்றாமாண்டு

## முகமூடி

குலுக்கும் கைகளில் ஆயுதமும்

நீட்டிய பூங்கொத்தில் அரவமும்

தேன் வடியும் வார்த்தைகளில் விடமும்

தோளில் சாயும் போதே கழுத்தறுக்கவும்

சிலருக்கு அது தேவைப்படுகிறது

நட்பெனும் முகமூடி.....!

சினேகா. வே

வணிகக் கூட்டாண்மைச் செயலரியியல், மூன்றாமாண்டு

## யாரோ?

யாரோ நீ யாரோ

ஏன் இந்தக் காயம்

என்னைச் சுற்றி நாளும்

கடந்து போகும் சாபம்....

இருந்த இரத்த பாசமும்

இன்றில்லை

வந்த உயிர் பாசமும் எனக்கில்லை....

வென்றாலும் வீழ்ந்தாலும்

கேட்க ஆளில்லை

ஏனோ இந்த

வாழ்க்கை மட்டும்....

செல்வோம் வெகுதொலைவு என்று

பயணித்த கால்கள்

சன்னலோரம் தலை சாய்த்து

ஏங்கிய விழிகள்....

கண்ணீர்த் துளிக்கும்

கருவிழிக்கும் இடையே

வந்து சென்றது

யாரோ நீயாரோ.......

ம. ஹரிணி, இளம் வணிகவியல், இரண்டாமாண்டு

## சொல் விளையாட்டு விடைகள்

கரந்தை பாலை முல்லை
மௌவல் சேடல் காயா
குவளை செருவிளை விரை
அனிச்சம்

பா. சுகன்யா, முதுகலைத்தமிழ், முதலாமாண்டு

## முயற்சி

முயற்சிகளை
எழுப்பிவிடுங்கள்
வலிகளை
வாடகைக்கு விடுங்கள்
தன்னம்பிக்கையைத்
துணைக்கு அழையுங்கள்
தோல்விகள் தொந்தரவு
தான் செய்யும் என்றும்
தோல்விகள் சுமையல்ல!
வெற்றிகள் சுலபமுமல்ல!

மை. விண்ணரசி
இளமறிவியல் கணிதவியல், முதலாமாண்டு

## நிலவு

வட்ட வடிவம் கொண்டவனும் நீயே
வெண்மை நிறம் உடையவனும் நீயே
பகலில் தூங்கி இரவில் விழிப்பதும் நீயே
வானத்தின் விளக்கும் நீயே
பிள்ளையின் பசி தீர வைப்பதும் நீயே
பிள்ளையின் சிரிப்பும் நீயே
பௌர்ணமி நிலவே
என் உயிர் தோழனும் நீயே!!

மு. ஹேமாபிரியா
இளம் வணிகவியல், இரண்டாமாண்டு

# இயற்கை

*இந்த உலகில் நிரந்தரமானவர்*
*என்று எவரும் கிடையாது*
*நிரந்தரமானது இயற்கையும்*
*இயற்கையின் நிகழ்வுகளும் மட்டுமே...!*
*நான் விடும் மூச்சுக் காற்றில்*
*தான் நீ வாழ்கிறாய்*
*என்னை அழிப்பது*
*உன்னை நீயே வதைப்பதற்குச் சமம்*
*ஏழை பணக்காரன்*
*என்று பாரபட்சம் இல்லாமல்*
*கொடுப்பது இயற்கை மட்டுமே...!*
*நீ அழைத்தால் மழை வராது*
*ஆனால் மரம் அழைத்தால் மழை வரும்*
*இயற்கை இறைவனின் பரிசு*
*உருவாக்கி விட்டு அழித்தால் நியாயம்*
*அழிப்பதை மட்டுமே வேலையாகக்*
*கொண்டால் அது பாவம்...!*
*இயற்கை இறைவனின் பரிசு*
*உருவாக்கிவிட்டு அழிக்காதே*
*அது உன்னைத் திரும்பி அழித்து விடும்...!*
*நீ இயற்கையை அழிப்பது*
*சரி என்றால்*
*உன்னை இயற்கை*
*அழிப்பதும் சரி தானே...!*
*ஒவ்வொரு வினைக்கும் எதிர்வினை உண்டு*
*நல்லது செய்தால் நல்லதே நடக்கும்*
*இயற்கையும் அப்படித்தான்*
*போற்றுவோம் இயற்கையைத் தெய்வமாக!*
*இப்புவியினில் வாழும் வரை.....!*

*ரா. தீபிகா, இளம் வணிகவியல் முதலாமாண்டு*

## கலாம் எனும் காவியம்

இராமேஸ்வரத்தில் இரத்தினமாய்
தோன்றியவர் நீரே
ஏழ்மையை எதிர்த்து
ஏட்டுக் கல்வியைக் கற்றவரும் நீரே!
தமிழன்னை ஈன்றெடுத்த
தங்கமகன் நீரே
இந்தியாவின் குடிமகனாய்
உயர்ந்தவரும் நீரே!
விண்ணுலகில்
விண்கலனை ஏவியவர் நீரே
மண்ணுலகில்
எளிமையாக வாழ்ந்தவரும் நீரே!
மாணவர்கள் மனதில் நின்ற
மாமனிதர் நீரே
இன்மொழியால்
இளைஞர்களை ஈர்த்தவரும் நீரே!
பாரதம் போற்றும்
'பாரத ரத்னா' விருதைப் பெற்றவர் நீரே
'கனவு காணுங்கள்' என்று கூறிய
கனவு நாயகன் நீரே!
'கலாம் என்னும் காவியமாக'
நினைவில் நிற்பவர் நீரே!

**பா. லோகேஸ்வரி**

**இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு**

## மௌனம்

*பிடித்ததால் பேசத்துடித்தது மனமாயினும்*

*தயக்கத்தால் விளைந்தது மௌனமே*

*உள்ளத்தில் கடுஞ்சொற்கள் நிறைந்ததாயினும்*

*வெளிப்படும் ஆயுதம் மௌனமே*

*பகைவர் வீண்பழி சுமத்துவராயினும்*

*கடைப்பிடித்தது மௌனமே*

*முகத்துதி பாடி முதுகில் குத்தியவராயினும்*

*புன்னகையுடன் சந்தித்தது மௌனமே*

*மௌனத்தின் பலமறிந்து பார்*

*மௌனத்தால் உண்டாகும் அமைதி பெரிது*

*அதனால் உண்டாகும் இழப்பு குறைவு*

*பலனோ பன்மடங்கு பெறுவாய்!!*

**ம. மரியநிகிதா**

**இளமறிவியல் கணிதவியல், முதலாமாண்டு**

## மின்மினிப் பூச்சி

*சின்னஞ்சிறு விளக்கு ஒளியாய்*

*கவலை இருள் போக்கினாய்*

*மனம் மயங்கச் செய்து*

*ஆனந்த ஊஞ்சலில் ஆட செய்தாய்*

*உனை பிடிக்க நான் வர*

*நீ எதைப் பிடிக்க செல்கிறாய்*

*இரவில் மின்னி மாயம் செய்யும் மாயனே*

*பகலில் உன்னை நான் தேடயில் எங்கே போனாய்!*

**மா. ஜெகதீஸ்வரி**

**இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு**

# தகவல் களஞ்சியம்

## திருக்குறளின் சிறப்புகள்

- திருக்குறளில் திருவள்ளுவர் பயன்படுத்தாத சொல் ஒன்பது.
- திருக்குறளில் இடம்பெறும் மலர் அனிச்சம், குவளை.
- திருக்குறளின் பெருமைக்கும் சிறப்புக்கும் சான்றாக விளங்கும் நூல் திருவள்ளுவமாலை.
- திருக்குறளில் 1705 முறை பயன்படுத்தப்பட்ட ஒரே எழுத்து னி.
- திருக்குறளில் இருமுறை வரும் ஒரே அதிகாரம் குறிப்பறிதல்.
- திருக்குறளில் மொத்தம் 14,000 சொற்கள் உள்ளன.
- திருக்குறள் என்பது அகரத்தில் தொடங்கி னகரத்தில் முடிகிறது.
- திருக்குறளில் இடம்பெற்ற ஒரே பழம் நெருஞ்சிப்பழம்.
- திருக்குறளில் உள்ள மொத்தம் எழுத்துகள் 42,194.
- ஒரே குரலில் 6 முறை இடம்பெற்ற சொல் பற்று.
- திருக்குறளில் இடம்பெறும் ஒரே விதை குன்றிமணி.
- திருக்குறளில் பயன்படுத்தப்படாத ஒரே உயிரெழுத்து ஔ.
- திருக்குறளில் 37 தமிழ் எழுத்துகள் இடம் பெறவில்லை.
- திருக்குறளில் இடம்பெற்ற இரண்டு மரங்கள் பனை மற்றும் மூங்கில்.
- திருக்குறளில் ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்பட்ட இரு எழுத்துகள் ளீ, ங.
- இதுவரை 107 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது திருக்குறள்.

**ஐஸ்வர்யா. மோ, இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு**

## சாதனைப்பெண் - பில்லுச்சேரி சின்னப்பிள்ளை

Ω மதுரை மாவட்டத்திலுள்ள பில்லுச்சேரி என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர் சின்னப்பிள்ளை. இவர் பிறந்தது மதுரை அழகர் கோவில் சாலையில் உள்ள கள்ளந்திரி கிராமம். இவர் 1990ஆம் ஆண்டு மதுரைக்கு அருகே உள்ள 'புல்லுகளஞ்சியம்' எனும் சிறுசேமிப்புக்குழுவைத் தொடங்கினார்.



Ω ஒடுக்கப்பட்ட எளிய மக்கள் தங்கள் தேவைகளை எதிர்கொள்ளும் பொருட்டு பல சுய உதவிக் குழுக்களை உருவாக்கினார். நாளடைவில் இச்சேமிப்புத் திட்டம் பல இடங்களில் பரவியது. தற்போது தமிழ்நாடு, ஆந்திரா, புதுச்சேரி, கர்நாடகா, உட்பட 14 மாநிலங்களைச் சேர்ந்த 240 களஞ்சியக் கூட்டமைப்புகளை நிறுவி தலைமை வகித்து வருகிறார்.

Ω இவர் 1999ஆம் ஆண்டில் ‘ஸ்திரீ சக்தி புரஸ்கார்' எனப்படும் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டார். அப்போதைய பிரதமர் வாஜ்பாய் விருது வழங்கியதோடு சின்னப் பிள்ளையின் கால்களைத் தொழுது வணங்கினார்.

Ω அன்றுமுதல் பில்லுச்சேரி சின்னப் பிள்ளையின் புகழ் இந்தியா முழுவதும் பரவியது. அதன்பிறகு, 1999ஆம் ஆண்டு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தியமைக்காக வழங்கப்பட்ட 'பஜாஜ் ஜானகிதேவி’ விருதினையும் பெற்றார்.

Ω தமிழக அரசு ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொற்கிழி வழங்கி பாராட்டியது. 2007ஆம் ஆண்டு சமூகச் சேவைக்காக 'தூர்தர்சன் பொதிகை' விருதினையும் பெற்றார். 2019இல் மத்திய அரசு பத்மஸ்ரீ விருதை வழங்கி, இவரைக் கௌரவித்துள்ளது.

Ω மதுவிலக்கு, கந்துவட்டி, ஒழிப்புக்காகப் போராடியும் வருகிறார். இவர் எழுதப் படிக்கத் தெரியாதவராக இருந்தாலும் பல விருதுகளுக்கும் பெருமைகளுக்கும் சொந்தக்காரர். சமூகத்தில் மாற்றம் கொண்டுவர வயதும் கல்வியும் ஒரு தடையில்லை என்பதை நமக்கு உணர்த்துகிறார் சின்னபிள்ளை.

**பிரியதர்ஷினி .ரா, இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு**

## முதல் பெண்கள்

- இந்தியாவின் முதல் பெண் மருத்துவர் **முத்துலட்சுமி ரெட்டி**
- சுதந்திரத்திற்காகப் பெண்களின் சார்பில் ஆங்கிலேயரை எதிர்த்து போராடிய முதல் பெண் வீராங்கனை **வேலுநாச்சியார்**
- தேர்தலில் போட்டியிட்ட முதல் இந்தியப் பெண் **கமலா தேவி**
- இந்தியாவின் முதல் பெண் ஆசிரியர் **சாவித்திரிபாய் புலே**
- இந்தியாவின் முதல் பெண் கவர்னர் **சரோஜினி நாயுடு**
- ஐ.நா. பொது அவையின் முதல் பெண் தலைவர் **விஜயலட்சுமி பண்டிட்**
- இந்தியாவின் முதல் பெண் நீதிபதி **அன்னா சாண்டியா**
- இந்தியாவின் முதல் பெண் முதலமைச்சர் **சுசேத்தா கிரிபிலாஜி**
- எவரெஸ்ட் சிகரம் தொட்ட முதல் மாற்றுத்திறனாளி பெண் **அருணிமா சின்ஹா**
- இந்தியாவின் இரும்புப் பெண்மணி **இந்திரா காந்தி**

**சு. அருணிமா தேவி, இளங்கலை தமிழ், இரண்டாமாண்டு**

# தூரிகைத் தூரல்கள்



எஸ். தீபிகா, கணினியியல்,
இரண்டாமாண்டு, சுழற்சி - 2



கை. மேரி பெர்னத் முஹய்ஸ்
உயிர்வேதியியல், முதலாமாண்டு




பூ. பிரியங்கா
உளவியல், மூன்றாமாண்டு



ப. தமிழரசி
கணினிப்பயன்பாட்டியல்
முதலாமாண்டு

ம. புஷ்பவள்ளி
உயிர்வேதியில்
முதலாமாண்டு






எஸ். சரண்யா
வணிகவியல்
முதலாமாண்டு



இர. லோகேஷ்வரி
இளங்கலைத்தமிழ்
முதலாமாண்டு

ச. சிவ சத்யா, கணிதவியல்
முதலாமாண்டு





மு. ஞான சௌந்தர்யா,
கணினிப்பயன்பாட்டியல், முதலாமாண்டு



ஜி. பத்ம ஸ்ரீ
நிர்வாகவியல், மூன்றாமாண்டு

இ. சக்தி பிரியா
கணினியியல் – சுழற்சி 2






எஸ். மகேஷ்வரி
வணிகவியல், இரண்டாமாண்டு




எஸ். இலக்கியா
ஆங்கில இலக்கியம், மூன்றாமாண்டு

அ. அனிதா
முதுகலைத்தமிழ், முதலாமாண்டு








என். மோனிஷா
முதுகலை ஆங்கிலம்,
முதலாமாண்டு


# துறை நிகழ்வுகள்

❖ *21.02.2022* உலகத் தாய்மொழி நாள் விழா







❖ *25.03.2022* அகழ் - ஆய்வரங்கம்











முன் அட்டை - ம. பூஜா, கணினியில், முதலாமாண்டு
பின் அட்டை - பா. கீர்த்தனா, வணிகவியல், மூன்றாமாண்டு

தமிழ்த்துறை
சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு
சோகா இகெதா கலை மற்றும் அறிவியல்
மகளிர் கல்லூரி
சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம்,
சென்னை 600 099.

சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு